**சுருக்கம்**

உதவிபெறும் கல்லூரிகள் - மேலநீலிதநல்லூர் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரி - தனிஅலுவலர் நியமனக்காலம் 15.07.2022-ல் நிறைவடைந்தது - 16.07.2022 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு தனிஅலுவலர் நியமன காலநீட்டிப்பு செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

<u>உயர்கல்வித் (டி2) துறை</u>

அரசாணை(நிலை)எண்.155

நாள்: 12.08.2022
சுபகிருது வருடம், ஆடி- 27
திருவள்ளுவராண்டு 2053
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.146, உயர்கல்வித் (டி2) துறை, நாள் : 15.07.2021.
2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.26486/எப்4/2020., நாள்: 14.07.2021.

*****

**<u>ஆணை:</u>**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திருநெல்வேலி தேவர் எஜுகேஷனல் சொசைட்டி (பதிவெண் 43/1969) மற்றும் மேலநீலிதநல்லூர் தேவர் எஜுகேஷனல் சொசைட்டி (பதிவெண் 78/1971) ஆகிய இரு சங்கங்கள் இணைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லாமல் இருப்பதாலும், திருநெல்வேலி தேவர் எஜுகேஷனல் சொசைட்டிக்கு (பதிவெண் 43/1969) தமிழக அரசால் வழங்கப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரியை, மேலநீலிதநல்லூர் தேவர் எஜுகேஷனல் சொசைட்டி (பதிவெண் 78/1971) முறைகேடாக நிர்வாகம் செய்து வருவதாலும், மேலும், அக்கல்லூரியில் உதவி பேராசிரியர்கள் பணி நியமனம் குறித்து விசாரணை செய்ய, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையால் நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.டி.ஹரிபரந்தாமன் அவர்களின் அறிக்கையில், அக்கல்லூரியில் 13 உதவி பேராசிரியர்கள் பணி நியமனம் செய்ததில் முறைகேடு நடந்திருப்பதாக தெரிவித்துள்ளதாலும், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம், 1976, பிரிவு 14-A-ன்படி தென்காசி மாவட்டம், மேலநீலிதநல்லூர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியின் மேலாண்மையை தற்காலிகமாக இடைநீக்கம் செய்து, அக்கல்லூரியினை நிர்வகிக்க, திருநெல்வேலி மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநரை தனி அலுவலராக ஒரு வருட காலத்திற்கு நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், 16.07.2021 நாளிட்ட கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் வாயிலாக திருநெல்வேலி மண்டல கல்லூரி இணை இயக்குநரை தனி அலுவலராக ஒரு வருட காலத்திற்கு நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது என்றும் தற்போது திருநெல்வேலி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டம்,

...2

மேலநீலிதநல்லூர் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரிக்கு நியமிக்கப்பட்ட தனி அலுவலரின் பதவிக்காலம் 15.07.2022-இல் நிறைவடைகிறது எனத்தெரிவித்து 16.07.2022 முதல் தனிஅலுவலர் நியமனத்திற்கு நீட்டிப்பு ஆணை வழங்குமாறு திருநெல்வேலி மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநரால் கோரப்பட்டுள்ளது என தெரிவித்து மேலநீலிதநல்லூர், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரிக்கு நியமிக்கப்பட்ட தனிஅலுவலருக்கு நீட்டிப்பு ஆணை வழங்குமாறு கல்லூரிக்கல்வி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கல்லூரிக்கல்வி இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று மேலநீலிதநல்லூர் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரிக்கு அரசாணை (நிலை) எண். 146 உயர்கல்வி (டி2) துறை, நாள் 15.07.2021-ல் தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) சட்டம், 1976 பிரிவு 14-Aன் படி ஓராண்டு காலத்திற்கு தனி அலுவலராக நியமனம் செய்யப்பட்ட திருநெல்வேலி மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநரின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், மேற்படி கல்லூரிக்கு திருநெல்வேலி மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநரை தனிஅலுவலராக நியமனம் செய்ததை 16.07.2022 முதல் மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்து ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை – 15.

திருநெல்வேலி மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)

பதிவுத் துறைத் தலைவர், சென்னை – 28.

தென்காசி மாவட்டப் பதிவாளர், தென்காசி.

பதிவாளர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

கல்லூரிச் செயலர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, மேலநீலிதநல்லூர்,
தென்காசி மாவட்டம்.

நகல்

சட்டத்துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9.

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.

முதன்மைச் செயலாளரின் தனி செயலர், உயர்கல்வித்துறை, சென்னை – 9.

இ.கோ/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/8/22
பிரிவு அலுவலர்
12/8/22